சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 76 | 08-11-2012



08-08-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : ஐரோப்பிய வாழ்வியல்: ஓர் அனுபவப் பகிர்வு**

**தொடக்க உரையாடல் : ஏ. ஜி. யோகராஜா**

*1. **ஐரோப்பா ஓர் உயர் முதலாளித்துவத்தின் அடையாளமா?***
*2. **ஐரோப்பாவில் மாக்சிசம் தோற்றுவிட்டதா? சோசலிசம் நிலவுமா?***
*3. **ஐரோப்பியச் சமூகத்தில் ஜனநாயகம், பண்பாடு சமூகநலத்திட்டங்கள்***

*ஆகிய மூன்று தலைப்புகளில் உரையாடப்பட்டது. விவாதத்திற்குப் பதிலாக உரையாடல் முறைமையை வலியுறுத்தியதைத் தொடர்ந்து, ஐரோப்பா பற்றிய தமது புரிதலின் அடிப்படையில் தொடக்கவுரை தொடங்கப்பட்டது.*

*அரசு - அரசாங்கம் என்பவற்றிற்கிடையில் தெளிவான, உறுதியான வேற்றுமையைக் கொண்டிருக்கிறது ஐரோப்பிய சமூகம்.*

*அரசு கூடியவரை வர்க்கங்களுடனான நேரடித் தொடர்புகளைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரம் மிக்க ஓர் அலகாகச் செயற்பட்டுவருகிறது. அவ்வகையில் தொழில்முறைசார் அனுபவம் மிக்க அறிஞர்கள், ஆலோசகர்களின் கருத்துக்களைப் பெறுவதுடன், அவர்களுக்கு முன்னுரிமையும் அளித்துவருகிறது. சமூகஜனநாயகத்தை கட்டம் கட்டமாக வளர்ச்சிபெறச் செய்வதுடன் பன்முகரீதியான கூட்டுச்சிந்தனை முறைமைக்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. நாட்டில் சமாதானமற்ற சூழலைத் தவிர்ப்பதும் ஐரோப்பிய அரசுகளின் பிரதான கொள்கையாக இருந்துவருகிறது.*

*அரசாங்கம் இங்கு முதலாளித்துவச் சார்புநிலையைக் கொள்கையாகக் கொண்டவை என்பது சந்தேகத்துக்கிடமில்லாத உண்மை.*

> ஐரோப்பிய நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதாலும் அங்குள்ள செல்வம் காரணமாகவும் முதலாளியச் சமூகம் பற்றிய பிரமிப்பு ஏற்படுகிறது. ஆனால் அந்தச்செல்வம் மூன்றாம் உலக நாடுகளின் உழைக்கும் மக்களையும் சுற்றுச்சூழலையும் வளங்களையும் அடாத்தாகச் சுரண்டுவதன் மூலம் பெறப்படுகிறது என்கிற உலகமய யதார்த்தம் இங்கே கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

***ஐரோப்பா ஓர் உயர் முதலாளித்துவத்தின் அடையாளமா?***

*"இழப்பதற்கு ஏதுமற்ற மக்கள்" என்ற ஓர் சமூகம் இருக்கக் கூடாது என்பதில் ஐரோப்பிய முதலாளித்துவம் உறுதியாக உள்ளது.*

*ஐரோப்பாவில் பொதுவாக அனைத்துத் துறைகளும் கொம்பனி முறைகளுக்குட்பட்ட Corporate மயப்பட்டிருப்பதால், தனிப்பட்ட முதலாளி - தொழிலாளிகளுக்கிடையிலான உறவு அருகிப்போயுள்ளது.*

*இதனால், முதலாளி - தொழிலாளி நேரடி முரண் கணிசமானளவு குறைக்கப்படுகிறது.*

*சிறிய நிறுவனங்கள், தனிப்பட்ட முதலாளிகள், சிறு முதலாளிகள் தம்மைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத நிலை. அத்தகைய தனிப்பட்ட அல்லது சிறு முதலாளிகளை உழைக்கும் வர்க்கத்தை சேர்ந்தவர்களாகவே பார்க்க வேண்டியுள்ளது.*


*ஐரோப்பிய முதலாளித்துவம் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பேணுதல் அதனை மேலும் சிறப்பாக்குதல் மூலம் மக்கள் முதலாளித்துவத்துக்கு எதிராக நிறுவனமயப்படுவதையோ மக்கள் கிளர்ச்சிகள் ஏற்படுவதையோ முடிந்தளவுக்கு தடுத்தே வருகிறது.*

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

மின்பற்றாக்குறை : தமிழக அனுபவத்திலிருந்து நாம் கற்க வேண்டியவை
மு. மயூரன் | 08-11-2012

நெருங்கிவரும் இயற்கை அபாயம்: மாயையும் உண்மையும்
தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ | 15-11-2012



வீரமாமுனிவர்

*வீரமாமுனிவர் (நவம்பர் 8, 1680 - பெப்ரவரி 4, 1746) இத்தாலி நாட்டிலுள்ள கேசுதிகிலியோன் என்னும் இடத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் - Constantine Joesph Beschi. கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில், 1709ஆம் ஆண்டு இயேசுசபைப் குருவானபின், 1710 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்தார்.*

*தொன்னூல் விளக்கம்என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார். கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில், தமிழில் முதல்முதலாகப் பேச்சுத்தமிழை விவரிக்க முனைந்தவர். வழக்கும் செய்யுளுமே ஒரு மொழியின் இலக்கணமாக அமையுமென்றாலும், இரட்டை வழக்கு மொழியான தமிழில், பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் அமைந்திராத காலத்தில் கொடுந்தமிழ் இலக்கணம் வகுத்தது சிறப்பான முயற்சியே எனல் வேண்டும். திருக்குறளில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்தவர் வீரமாமுனிவர். உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், பரமார்த்த குருவின் கதை, வாமன் கதை என 23 நூல்களைத் தமிழில் படைத்தவர். திருக்காவல் ஊர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை இவரது பிற நூல்கள்.*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## ஐரோப்பிய வாழ்வியல்: ஓர் அனுபவப் பகிர்வு

முன்பக்கத் தொடர்ச்சி..

**ஐரோப்பா சமூகத்தில் ஜனநாயகமும் பண்பாடும்:**

அடிப்படையில் ஐரோப்பா ஓர் உயர் அமைப்புக்கு (Structure) உட்பட்டது. சமூக, குடும்ப நெருடல்களுக்கு அப்பாற்பட்ட ஜனநாயகப் பண்பு பேணப்படுகிறது. பாடசாலை முதல் ஆஸ்பத்திரி வரை எந்தவொரு செயலுக்கும் உரியவரின் அனுமதி பெறப்படும். பண்பாட்டு ரீதியில் - அலுவலக வேலைகள், கியூ வரிசை முறை, வணக்கம் சொல்லுதல், கை குலுக்குதல், அறிமுகம் மேற்கொள்ளல் போன்ற சின்னச் சின்ன விடயங்களில் கனிவானதும் ஒழுக்கம் மிக்கதுமான நடைமுறைகள் பேணப்படுகின்றன. சிறுபான்மையினருக்கான உரிமைகள், தனிமனித சுதந்திரம், பிள்ளைகளின் கல்வி, பிள்ளை வளர்ப்பு, உணவு முறை அனைத்திலும் திணிப்பற்ற முறைமை கடைப்பிடிக்கப்படுகிறது.

**மார்க்சிசம் தோற்றுவிட்டதா? சோசலிசம் நிலவுமா?**

மார்க்சிசத்தை பொறுத்தவரையில் இரண்டு விதமாகப் பார்க்க வேண்டியுள்ளது. 1. மார்க்சிச சிந்தனை முறை 2. மார்க்சிச நடைமுறை

மார்க்சிச சிந்தனை முறை என்பது மனித சமூகத்தில் நிலவுகின்ற ஒன்று. அந்தச் சிந்தனை முறை இன்று பரவலாக எல்லா மட்டங்களிலும் காணப்படுகிறது. முதலாளித்துவத்துக்கும் அதன் தேவையைப் பூர்த்தி செய்ய பொருள்முதல்வாதச் சிந்தனை முறையே கைகொடுக்கிறது. ஆன்மீகத்திலும் அந்தப் பொருள்முதல்வாதச் சிந்தனை முறையே செயற்படுகிறது. மாக்சிசம் என்பது உலக இயக்கத்தைப் பற்றிய ஒரு விஞ்ஞானம். அது ஒரு போதும் தோற்றுப் போகாது. மார்க்சிச நடைமுறை என்னும் போது, அது புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் சிக்கலுக்குள்ளாகி உள்ளது. அதே நேரம் முதலாளித்துமானது அதனை உதறிவிட்டுச் செல்ல முடியாமல் நிற்கிறது. சோவியத் யூனியன் காலத்துப் பின்லாந்திலும், இன்றைய காலத்து ஸ்கன்டிநேவிய நாடுகளிலும் மார்க்சிச நடைமுறை பெருமளவு உள்வாங்கப்பட்டுள்ளது. புரட்சிக்குப் பிந்திய ஒரு சமூகத்தைவிட உயர் முதலாளித்துவ சமூகத்தில் சோசலிச சமூகத்திற்குரிய பல பண்புகளை மக்கள் அனுபவிக்கிறார்கள். இதன் வளர்ச்சிப் போக்கு முழு சோசலிச சமூகத்தை உருவாக்குவதற்கும், அதன் தொடர்ச்சியான பல நூற்றாண்டுகால பரிணாம வளர்ச்சியே கம்யூனிச உருவாக்கத்துக்கும் அடிப்படையாக அமையுமோ என்பது ஒரு கேள்வியாக உள்ளது.

**ஐரோப்பிய விழுமியங்கள்**

உயர் வாழக்கைத் தரம் - வீட்டுவசதி. உணவு, ஓய்வு என்பவற்றில் போதிய கவனம் செலுத்தப்படுகிறது. சக மனிதனை மதிக்கும் பண்பாடு பொதுவான விடயமாக உள்ளது. அலுவலகங்களில் இலகுவான நடைமுறை - பாடசாலைகள் முதல் கிராமசபை வரை அதிகாரப் பங்கீடும், பரவலாக்கலும் நடைமுறையில் உள்ளது. பிள்ளை வளர்ப்பு முறையில் - சுதந்திரம், அடிப்பது சட்டப்படி குற்றமாதல், சரி-பிழை என்பதற்கு அப்பால் சரி-பிழையைப் பகிரும் முறைமை (உரையாடல்), குழந்தைகளைக் குழந்தைகளாக அனுமதித்தல், கருத்துச் சொல்வதற்கான சுதந்திரம் என்பன பேணப்படுகின்றன. தேர்தல் முறைமை பகட்டற்றதாக உள்ளது. உரையாடற் பழக்கமும் அதற்கான சுதந்திரமும் போதியளவு உள்ளன. உழைப்பிற்கேற்ற ஊதியம் - இளம் வயதினர் ஒரு மாதச் சம்பளத்திலேயே ஒரு கார் வாங்கிக் கொள்ளுமளவிற்று போதிய சம்பளம் வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சட்டப்படியான சம்பள முறைமை. - விடுமுறைகளில் செல்லும் வசதி, மருத்துவ ஓய்வு, ஞாயிற்றுக் கிழமை வேலைக்கு அதிக சம்பளம், எல்லோருக்கும் ஓய்வூதியம்.

**ஐரோப்பாவில் உள்ள பாதக அம்சங்கள்:**

நிறப் பாகுபாடு - யாழ்ப்பாணச் சாதிய முறையினாலும், இனரீதியிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது ஒப்பீட்டளவில் சிறிய விசயமாகும். மறைமுக அல்லது நாசூக்கான ஜனநாயக மறுப்பு - பிற சமூகங்களுக்கு எதிரான கூட்டு உளவியல், எமது பிள்ளைகள் உயர் கல்வி, உயர் பதவிகளை அடைவதில் நிறையக் கஸ்டங்கள் உண்டு. பெண்களுக்கான பதவி உயர்வுக்கு இன்னும் கஸ்டமான சூழல் உள்ளது. - சுவிஸ் நாட்டில் பெண்களுக்கான வாக்குரிமை 1979 இல் தான் வழங்கப்பட்டது. வேலையில் உள்ள கஸ்டங்கள் - சுவிஸ் நாட்டில் 8 ½ - 9 மணி நேர வேலை கட்டாய வேலையாக உள்ளது, வேலைத் தளங்களில் நோவின்றி மனஅழுத்த நிலைக்கு தள்ளப்படும் போக்கு, தொழிற்சங்கங்கள் தொழிலாளி-முதலாளிக்கு இடையிலான ஏஜென்சிகளாக மட்டுமே உள்ளன, உணவுச்சாலை போன்ற வேலைகளில் மேலதிக கஸ்டங்கள் கருத்தில் எடுக்கப்படுவதில்லை - ஞாயிற்றுக் கிழமைக்குரிய சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இலவச மருத்துவம் இல்லை. நுகர்வுக் கலாச்சாரத்தின் மையப்புள்ளியாக விளங்குதல்.

**ஐரோப்பிய சமூக நலத் திட்டங்கள்:**

குறைந்த வருமானம் பெறுபவர்களின் குடும்பத்தின் அடிப்படை வசதியைப் பூர்த்தி செய்யும் வகையில் (உணவு, உடை, வதிவிடத்துக்கான) சமூக சேவை நிதி வழங்கப்படும். வேலையற்றவர்க்கும் இச் சலுகை உண்டு - வேறுபாடும் உண்டு. குடும்பத்தை இயக்கும் சக்தியாக இருப்பவர்கள் பெண்கள் என்பதால் கணவனின் சம்பளத்துடன் பெண்களுக்கான சலுகைக் கொடுப்பனவும் உண்டு. அத்துடன் அடிப்படை ஓய்வூதியப் பணமும் அவர்களுக்கு உண்டு. கட்டாயக் கல்விக் காலமாகிய 9 ஆண்டுகளுக்கு கல்வி இலவசம். தொடர்ந்து உயர் கல்விக்கான இலவசக் கல்வி முறையும் உண்டு. ஆனால் அது சமூக சேவைகள் ஊடாகவே வழங்கப்படும். அந்திம காலத்துக்கான வீடுகள் - வயோதிபர் மடம். ஓய்வூதியமும் சமூக சேவைப் பணமும் - வைத்தியம். 18 வயதுக்கு மேல் புறம்பான சமூக சேவை.

**கலந்துரையாடல் வேளையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்:**

ஐரோப்பாவை ஒட்டுமொத்தமாக ஒரேபடித்தானதாகக் கொள்ள முடியாது. ஒவ்வொரு நாட்டிலும் ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபாடான நடைமுறைகளே காணப்படுகின்றன. தொடக்க உரையாடலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் ஸ்கான்டினேவிய நாடுகளுக்குப் பொருந்துகின்றனவே ஒழிய ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு அப்படியே பொருந்துவனவல்ல. ஸ்கன்டினேவிய நாடுகளில் இப்போது காணப்படக்கூடியதாக இருக்கும் சமூகநலத் திட்டங்கள் யாவும் அங்கிருந்த இடதுசாரி சக்திகளின் பலம் பொருந்திய நிலையினூடாகப் பெறப்பட்டவையே ஒழிய அத்திட்டங்களை முதலாளியம் கொடுத்த வரப்பிரசாதங்கள் எனக் கருதுவது தவறு. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கொடுக்கப்பட்ட நலத்திட்டங்கள் யாவும் இன்று படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதுதான் யதார்த்தமாக இருக்கிறதே ஒழிய, மக்களைச்சார்ந்த திட்டங்கள் அதிகரித்துச்செல்லவில்லை. இந்தப்பின்னணியில் முதலாளியம் கொடுத்துள்ள இவ்வாறான நலத்திட்டங்கள் பரிணாமமடைந்து சோசலிசத்துக்கு இட்டுச்செல்லும் என்பது வெறும் கற்பனையாகவே இருக்க முடியும்.

வளர்ச்சி அடைந்த முதலாளிய நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதாலும் அங்குள்ள செல்வம் காரணமாகவும் முதலாளியம் பற்றிய பிரமிப்பு ஏற்படுகிறது. ஆனால் அந்தச்செல்வம் மூன்றாம் உலக நாடுகளின் உழைக்கும் மக்களையும் சுற்றுச்சூழலையும் வளங்களையும் அடாத்தாகச் சுரண்டுவதன் மூலம் பெறப்படுகிறது என்கிற உலகமய யதார்த்தம் இங்கே கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

இந்த முதலாளியக் "கட்டகத்தை" மாற்றாமல் இந்நாடுகளுக்கு வெளியே இந்நாடுகளால் செய்யப்படும் சுரண்டல்களை ஒழிப்பது சாத்தியமில்லை. இவ்வாறான கட்ட மாற்றங்கள் தேனீர்க்கடை உரையாடற்குழுக்களூடாக செய்யப்படக்கூடியவை அல்ல.

### மின்பற்றாக்குறை : தமிழக அனுபவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

* மின் பற்றாக்குறைக்கான காரணங்களாகப் பொதுவில் முன்வைக்கப்படுபவை.
* மின் உற்பத்தி, மின் விநியோகம் தனியார் மயப்படலும் அரசின் பொறுப்புகளும்
* பன்னாட்டு நிறுவனங்களும் மின்சாரமும்
*மக்களுக்கான மின்சாரம்.
* இலங்கை நிலவரத்துடனான பொருத்தப்பாடுகள்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA